**Town Centre Reborn**
மறுபிறவியெடுத்த நகர மையம்

# Transforming into a Vibrant Hub

## துடிப்புமிக்க மையமாக உருமாற்றுதல்

Bedok Town Centre will be revitalised with the introduction of new developments and improvement works to the existing facilities.

புடோக் நகர மையம், புதிய மேம்பாடுகளுடனும் தற்போதைய வசதிகளிலான மேம்பாட்டுப் பணிகளுடனும் புத்துயிரூட்டப்படும்.



Presented by:
வழங்கியோர்:

MND SINGAPORE
HOUSING & DEVELOPMENT BOARD

http://heartland.hdb.gov.sg

Illustrations are artists' impressions only. Actual development may differ.
விளக்கப்படங்கள் ஓவியரின் எண்ணப் பதிவுகள் மட்டுமே. உண்மையான மேம்பாடு மாறுபட்டிருக்கலாம்.

RemakingOurHeartland
Realise • Rejuvenate • Regenerate

Gateway to the East Coast

# Connecting You to a Vibrant Lifestyle

## துடிப்பு மிக்கதொரு வாழ்க்கைமுறையுடன் உங்களை இணைத்தல்



# LEARN

## About Past & Present

கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்

### Proposed Heritage Trail

Take a walk down memory lane and trace the cultural, coastal, and culinary traditions in East Coast!

### உத்தேச மரபுடைமைத் தடம்

நினைவுப் பாதையின் வழியே நடந்து ஈஸ்ட் கோஸ்ட்டின் கலாச்சார, கடலோர, சமையல் பாரம்பரியங்களைக் கண்டறியுங்கள்.






▲ Proposed heritage foot trail along Upper East Coast Road
அப்பர் ஈஸ்ட் கோஸ்ட் ரோட்டில் உத்தேச மரபுடைமை நடைபாதைத் தடம்

### Discovery Plans

Explore the existing and unique facilities within East Coast area through discovery plans strategically placed at your convenience.

### கண்டுபிடிப்புத் திட்டங்கள்

உங்கள் வசதிக்கேற்ப முக்கியமான இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் கண்டுபிடிப்புத் திட்டங்களின் வழி ஈஸ்ட் கோஸ்ட் வட்டாரத்திலுள்ள தற்போதைய வசதிகளையும் அதன் தனித் தன்மை வாய்ந்த அம்சங்களையும் சுற்றிப் பாருங்கள்.

▼ Discovery Plans
கண்டுபிடிப்புத் திட்டங்கள்






SINGAPORE UNIVERSITY OF TECHNOLOGY AND DESIGN
Established in collaboration with MIT

### Nurturing The Young

Bright minds looking to maximise their potential in the fields of technology and design will get a new home in East Coast when Singapore's fourth autonomous university is completed!

### இளையரைப் பேணி வளர்த்தல்

சிங்கப்பூரின் நான்காவது தன்னாட்சிப் பல்கலைக்கழகம் கட்டி முடிக்கப்படும்போது, தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்புத் துறைகளில் தங்கள் ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள விழையும் அறிவார்ந்த மாணவர்கள் ஈஸ்ட் கோஸ்ட்டில் ஒரு புதிய இல்லத்தைப் பெறுவார்கள்.

# LINK

## Up for Better Accessibility

மேலும் எளிதாக அணுகும் தன்மைக்கு இணைந்திருத்தல்









▲ Bedok Reservoir Station
புடோக் ரிசர்வாயர் நிலையம்

## Cycling Connectivity

### A Seamless Cycling Experience

A comprehensive cycling network will be introduced in phases within Bedok Town. With the dedicated cycling paths, residents will have easy access to MRT stations, major employment areas, parks, schools and neighbourhood centres.

### சைக்கிளோட்ட இணைப்பு

ஓர் இடைவெளியற்ற சைக்கிளோட்ட அனுபவம்

புடோக் நகருக்குள் ஒரு விரிவான சைக்கிளோட்டக் கட்டமைப்பு கட்டம் கட்டமாக அறிமுகப்படுத்தப்படும். சைக்கிள்களுக்கான பாதைகளின் வழி, எம்ஆர்டி நிலையங்கள், முக்கிய வேலை இடங்கள், பூங்காக்கள், பள்ளிகள், அக்கம்பக்க மையங்கள் ஆகியவற்றுக்குக் குடியிருப்பாளர்கள் எளிதாகச் சென்று வரலாம்.

### Access DTL3

- Enhanced transport connectivity with new stations along Downtown Line 3

டவுன்டாவுன் தடம் 3 வாயில்

- புதிய நிலையங்களுடன் மேம்பட்ட போக்குவரத்து இணைப்பு கட்டமைப்புடனும் டவுன்டவுன் தடம் 3



# SHAPE

Your Physical Environment

உங்கள் சுற்றுப்புறத்தை வடிவமையுங்கள்

Residents can look forward to more shopping options, modernised sports facilities and a new hawker centre. Pedestrian malls will also be improved creating a more welcoming experience for everyone.

குடியிருப்பாளர்கள், மேலும் அதிகக் கடைகள், நவீன விளையாட்டு வசதிகள், புதிய அங்காடி மையம் ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். அனைவருக்கும் வரவேற்கத் தகுந்த அனுபவத்தை ஏற்படுத்தும் வகையில் பாதசாரி மால்களும் மேம்படுத்தப்படும்.

## Town Centre Transformation

## நகர மைய உருமாற்றங்கள்













## Quality Living Environment

### Key Upgrading and Development Programmes

HDB towns and estates undergo continuous improvements under various upgrading and renewal programmes to improve the living environment.

Key works include :

- Lift Upgrading Programme (LUP)
- Neighbourhood Renewal Programme (NRP)
- Home Improvement Programme (HIP)
- Estate Upgrading Programme (EUP)
- Rejuvenation of Neighbourhood Centres
- Other Improvement Works



## தரமான வசிப்பிடச் சூழல்

### முக்கிய மேம்பாட்டுத் திட்டங்கள்

வீவக நகர்களும் பேட்டைகளும் வசிப்பிடச் சூழலை மேம்படுத்த, பல்வேறு மேம்பாட்டு மற்றும் புதுப்பிப்புத் திட்டங்களின் கீழ் தொடர்ந்து மேம்படுத்தப்படுகின்றன.

முக்கியப் பணிகளில் பின்வருவன அடங்கும்:

- மின்தூக்கி மேம்பாட்டுத் திட்டம் (எல்யுபி)
- அக்கம்பக்கப் புதுப்பிப்புத் திட்டம் (என்ஆர்பி)
- வீட்டு மேம்பாட்டுத் திட்டம் (ஹெச்ஐபி)
- பேட்டை மேம்பாட்டுத் திட்டம் (இயுபி)
- அக்கம்பக்க மையங்களுக்குப் புத்துயிரூட்டுதல்
- பிற மேம்பாட்டுப் பணிகள்




### New Housing Developments

Residents can enjoy more housing choices in the East Coast area with the introduction of more public and private housing developments.

### புதிய வீடமைப்பு மேம்பாடுகள்

மேலும் பல பொது மற்றும் தனியார் வீடமைப்பு மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் குடியிருப்பாளர்கள் ஈஸ்ட் கோஸ்ட் வட்டாரத்தில் மேலும் அதிக வீட்டு வசதித் தெரிவுகளைப் பெறலாம்.




### Creating an eco-friendly town

Introduce new schemes and projects to conserve energy and promote environmental sustainability through innovation and community engagement.

### சுற்றுச் சூழலுக்கு உகந்த நகரை உருவாக்குதல்

மின்சக்தியைச் சேமிக்க புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துதலும் புத்தாக்கம் மற்றும் சமூக ஈடுபாட்டின் மூலம் சுற்றுச்சூழலின் வளம் குன்றாத் தன்மையை ஊக்குவித்தலும்.

## Rejuvenation of Neighbourhood Centres

## அக்கம்பக்க மையங்களுக்குப் (என்சி) புத்துயிரூட்டுதல்

The Rejuvenation of Neighbourhood Centres (NCs) will improve the community spaces and enhance the vibrancy of the NCs to benefit both our residents and retailers.

என்சி-க்களுக்குப் புத்துயிரூட்டுவது சமூக வெளிகளை மேம்படுத்தி, நம் குடியிருப்பாளர்கள், கடைக்காரர்கள் ஆகிய இரு சாராருக்குமே பயனளிக்கும் வகையில் என்சி-க்களை மேலும் துடிப்பு மிக்கதாக்கும்.




## Distinct Identity

## தனித்தன்மை வாய்ந்த அடையாளம்

Enhancing the identity and image of East Coast area by strengthening the sense of arrival from vehicular gateways and better coordination of streetscape, by drawing reference to the history of East Coast area.

ஈஸ்ட் கோஸ்ட் வட்டாரத்தின் வரலாற்றைக் கருத்திற்கொண்டு, வாகன வாயில்களை வந்தடைந்த உணர்வை வலுப்படுத்தியும் மேலும் சிறந்த தெருத் தோற்ற ஒருங்கிணைப்பின் மூலமும் ஈஸ்ட் கோஸ்ட் வட்டாரத்தின் அடையாளத்தையும் பிம்பத்தையும் மேம்படுத்துதல்.



Remaking Our Heartland
Realise • Rejuvenate • Regenerate

Launched in 2007, the Remaking Our Heartland initiative aims to rejuvenate public housing estates to bring about a holistic transformation. Punggol, Yishun and Dawson were the first three towns/ estates to be upgraded.

In 2011, three more areas will be included under the Remaking Our Heartland programme.

2007ல் தொடங்கப்பட்ட, நம் வீடமைப்புப் பேட்டைகளை மறுஉருவாக்கம் செய்யும் திட்டம் ஒரு முழுமையான உருமாற்றத்தைக் கொண்டுவர நம் பொது வீடமைப்புப் பேட்டைகளுக்குப் புத்துயிரூட்டும் நோக்கம் கொண்டது. பொங்கோல், யீஷுன், டாவ்சன் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட முதல் மூன்று நகர்கள் / பேட்டைகள் ஆகும்.

2011ல் நம் வீடமைப்புப் பேட்டைகளை மறுஉருவாக்கம் செய்யும் திட்டத்தின் கீழ் மேலும் மூன்று வட்டாரங்கள் சேர்த்துக்கொள்ளப்படும்.

# East Coast
## is one of them!
ஈஸ்ட் கோஸ்ட் அவற்றில் ஒன்று!



# Gateway to the East Coast

The plans to revitalise East Coast will focus on 4 key areas:




## Our Vision

A well-connected Gateway to the East Coast, with enriched identity, active communities & easy access to recreational destinations.

வளப்படுத்தப்பட்ட அடையாளம், சுறுசுறுப்பான சமூகங்கள், பொழுதுபோக்குத் தலங்களுக்கு எளிதாகச் சென்றுவரும் வசதி ஆகியவற்றுடன் கூடிய, நன்கு இணைக்கப்பட்ட ஈஸ்ட் கோஸ்ட்டுக்கான ஒரு நுழைவாயில்.

# PLAY
## & Relax Outdoors
வெளிப்புறத்தில் விளையாடுங்கள், ஓய்வெடுங்கள்

### Outdoor Play Corridor

The Outdoor Play Corridor is the key connection that will provide a more direct access to link Bedok Town centre to East Coast Park and Bedok Reservoir Park.

A dedicated cycling and pedestrian path, with various new recreational facilities and rest points along the way, will provide residents easy access to key recreational destinations.

### வெளிப்புற விளையாட்டுப் பகுதி


வெளிப்புற விளையாட்டுப் பகுதி, புடோக் நகர மையத்தை ஈஸ்ட் கோஸ்ட் பூங்காவுடனும் புடோக் நீர்த்தேக்கப் பூங்காவுடனும் மேலும் நேரடியாக இணைக்கும் முக்கிய இணைப்பாக விளங்கும்.

வழி நெடுகிலும் பல்வேறு புதிய பொழுதுபோக்கு வசதிகளும் ஓய்விடங்களும் கொண்ட, சைக்கிளோட்டிகளுக்கும் பாதசாரிகளுக்குமான ஒரு தனிப்பட்ட பாதை குடியிருப்பாளர்கள் முக்கிய பொழுதுபோக்குத் தலங்களுக்குச் சென்று வருவதை எளிதாக்கும்.

# Direct Access to Recreational Facilities
மேலும் அதிக வசதிகளுக்கு நேரடியாகச் செல்லும் வசதி




▲ Night view of the Play Corridor
வெளிப்புற விளையாட்டுப் பகுதி




Enhancement works under PUB's ABC Waters Programme ▼
PUB-யின் ABC நீர்த் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகள்







▲ 'Kings of Freedom' at Sculpture Garden
'சுதந்திர மன்னர்கள்' சிற்பத் தோட்டம்



### Active Water Edge

New facilities at Bedok Reservoir Park and improvement works along Sungei Bedok will enliven the water edge for residents to enjoy.

### Active Lifestyle

Residents can enjoy a wide range of fitness facilities that will cater to all ages for a healthy lifestyle.

Selected fitness corners will be enhanced to include components relevant to the Individual Physical Proficiency Test (IPPT) for National Servicemen to train nearer to their homes.

### சுறுசுறுப்பான நீர் விளிம்பு

புடோக் நீர்த்தேக்கப் பூங்காவில் புதிய வசதிகளும் சுங்கை புடோக்கில் மேம்பாட்டுப் பணிகளும், குடியிருப்பாளர்கள் அனுபவிக்க நீர் விளிம்பிற்கு உயிரூட்டும்.

### சுறுசுறுப்பான வாழ்க்கைமுறை

குடியிருப்பாளர்கள், ஆரோக்கியமானதொரு வாழ்க்கைமுறைக்கு அனைத்து வயதுப் பிரிவினருக்கும் இடமளிக்கும் பலதரப்பட்ட உடற்பயிற்சி வசதிகளை அனுபவிக்கலாம். தனி நபர் உடலுரத் தேர்ச்சிச் சோதனை (IPPT) சார்ந்த கூறுகளை உள்ளடக்கும் வகையில் உடற்பயிற்சி நிலையங்கள் மேம்படுத்தப்படும். தேசிய சேவையாளர்கள் தங்கள் வீட்டுக்கருகிலேயே தங்கள் உடலுரச் சோதனைக்குப் பயிற்சி செய்ய இவை வழி செய்யும்.